வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 04.11.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 308 | பக்கங்கள் : 08

## கைதான 31 இந்திய மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 04

வடபகுதி கடற்பகுதியில் நேற்று முன் தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை கைது செய்யப்பட்ட 31 இந்திய கடற்றொழிலாளர்களை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.

குறித்த 31 பேரும் 3 படகுகளுடன், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இந்தநிலையில், அவர்களை எதிர் வரும் 17ஆம் திகதிவரை

07

# செம்மணி மனிதப் புதைகுழிக்கு உடனடியாக நீதி கிட்டவேண்டும்

### சம உரிமை இயக்கத்தின் தலைவர் தென்னே ஞானானந்த தேரர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், நவம்பர் 04

**யாழ்ப்பாணம் செம்மணி மனித புதைகுழி தொடர்பில் விரைவில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என சம உரிமை இயக்கத்தின் செயல்பாட்டாளர் தென்னே ஞானானந்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் குறித்த இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போராட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசாங்கம் பயங்கரவாத எதிரப்பு சட்டமொன்றை கொண்டுவருவதாக கூறியுள்ள போதிலும் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான அவர்களது நிலைப்பாடு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

தெற்கில் பட்டலந்த, சூரியகந்த, வடக்கில் செம்மணி மனித புதைகுழிகள் தொடர்பில் இந்த அரசாங்கத்தின் கீழ் எந்தவித ஆக்கபூர்வமான செயல்பாடுகளும் இது வரை எடுக்கப்படவில்லை.

மக்களுக்கு ஆசை வார்த்தைகளைக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், ஆட்சிக்கு வந்த பின் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து செயல்படுகிறது.

குறிப்பாக, தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சிக்கப்படுகிறது. அதனை அனை வரும்

07

## போதைமாத்திரைகளை விற்கும் கும்பலை சேர்ந்த இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 04

யாழ். நகரில் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் மாத்திரைகளை விற்பனை செய்யும் கும்பலைச் சேர்ந்த இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 3200 போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய

07

## டில்லி பயணமானார் சஜித்



கொழும்பு, நவ. 04

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மூன்று நாள்கள் அதிகாரபூர்வ பயணமாக நேற்று காலை டில்லி நோக்கி சென்றார்.

அவர் இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்ட அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளைச் சந்தித்து இரு தரப்பு நலன்

07

## அரசில் ஜனாதிபதி உள்ளிட்ட பலருக்கு பாதுகாப்பு தேவை

### பிரதி அமைச்சர் நளின் ஹேவகே

கொழும்பு, நவ. 04

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்திலுள்ள பலருக்குப் பாதுகாப்பு தேவை என்று பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

பாதாள உலக மற்றும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரர்களை அவர்கள் கையாள்வதால் இந்த பாதுகாப்பு தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், அவர்கள் மக்களுடன் இருக்கும் வரை, மக்களே அவர்களின் பாதுகாவலர்களாக இருப்பார்கள் என்றும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

07

## தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமையகம் யாழில் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 04

தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் தலைமைக் காரியாலயம் நேற்று யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகர ஆளுகைக்குள் உள்ள இலக்கம் 58, பொன். இராமநாதன் வீதியில் குறித்த அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

சட்டத்தரணி வி. மணிவண்ணன், எஸ்.சிற்பரன், பார்த்தீபன் உள்ளிட்ட கட்சியின் மத்திய குழு உறுப்பினர் களுடன் மன்னார், வவுனியா மவட்டங்களின் அமைப்பாளர்கள்,

07



## செம்மணி புதைகுழிக்குள் மழை நீர் அடுத்த வருடமே 3ஆம் கட்ட அகழ்வு



யாழ்ப்பாணம், நவ. 04

செம்மணி மனித புதைகுழிக்குள் மழை நீர் தேங்கி நிற்பதனால் அடுத்த வருடமே மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின்போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள

07

## வத்திக்கான் அமைச்சர் கொழும்பு வந்தடைந்தார்

கொழும்பு, நவ. 04

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வத்திக்கான் வெளிவிவகார அமைச்சரான பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் நாட்டை வந்தடைந்தார்.

அவரை வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா வரவேற்றுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை வலுப்ப டுத்துதல் மற்றும் மோதலுக்குப் பின்னரான நல்லிணக் கத்திற்கு ஆதரவளிப்பதில்

07

## தமிழக மீனவர்கள் வருகையை தடுக்க நடவடிக்கை வேண்டும்!

### வடமாகாண கடற்றொழிலாளர் இணையம்

மன்னார், நவ. 04

இலங்கை கடல் பரப்பில் கடற்படையினால் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை எவ்வாறு பலப்படுத்தினாலும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் நுழையாது இருக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் என். எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில்

07

## இளஞ்செழியனுக்கு மீண்டும் அநீதி இழைக்கவேண்டாம்

### மூத்த பத்திரிகையாளர் தனபாலசிங்கம்



கொழும்பு, நவ. 04

மேன்முறையீட்டு நீதி மன்ற நீதியரசராக பதவி உயர்வைப் பெறுவதற்கு சகல தகுதிகளையும் கொண்டிருந்த போதிலும், அது குறித்து மேல் நீதிமன்ற நீதி பதிகள் சங்கம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் கவனத்துக்கு நேரடியாகவே கொண்டுவந்த போதிலும் தனக்கு பதவியுயர்வு வழங்கப்படாமல் அநீதி இழைக்கப்பட்டதாகக் கவலை கொண்டிருக்கும் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை அரசியலுக்கு இழுத் துவந்து அவருக்கு மீண்டும் அநீதி இழைக்கக்கூடாது என்று ஒரு பத்திரிகையாளர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இளஞ்செழியனின் சொந்த ஊரான

07

## உயிருக்கு அச்சுறுத்தல் என ரெலோ தலைவர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 04

ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கனடாவில் வசிக்கும் நபர் ஒருவர் தொலைபேசி ஊடாக தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் அலங்கார மீன் உற்பத்தி; சாத்தியப்பாடு குறித்து ஆராய்வு!

யாழ்ப்பாணம், நவ. 04

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அலங்கார மீன் உற்பத்தி தொழில்துறையை ஆரம்பித்து, அதனை நிலைநிறுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், சவால்கள் மற்றும் எதிர்நோக்கிய வளர்ச்சி வாய்ப்புகள் குறித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

கொழும்பு பாதுக்கவில் அமைந்துள்ள ஹறித்த அலங்கார மீன் உற்பத்தி பண்ணைக்கு அமைச்சர் சென்றிருந்தார். அங்கு அலங்கார மீன் உற்பத்தியை பார்வையிட்டதோடு, கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

கடற்றொழில் அமைச்சின் செயலாளர் பீ.கே. கோலித்த கமல் ஜினதாச, அலங்கார மீன் உற்பத்தி துறையைச் சார்ந்த தொழில்முனைவோர் மற்றும் துறை நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

அலங்கார மீன் உற்பத்தி துறை, நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை வழங்கக்கூடிய புதுமையான தொழில்துறையாக கருதப்படுகிறது. உலகளவில் அலங்கார மீன் சந்தைக்கு நிலவும் அதிகமான தேவை காரணமாக, இலங்கை அதில் முக்கிய பங்காற்றும் திறன் கொண்டது என்பதை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வலியுறுத்தினார்.



அலங்கார மீன் உற்பத்தியாளர்களுடன் அமைச்சர் நேரடியாக கலந்துரையாடி, தற்போதைய உற்பத்தி மற்றும் ஏற்றுமதி துறையில் நிலவும் சவால்கள், உற்பத்தி தொழில்நுட்ப மேம்பாடு, தரநிலைகள், மற்றும் சர்வதேச சந்தை அணுகல் குறித்த பிரச்னைகள் ஆகியவை குறித்து விரிவாகப் பேச்சு நடத்தினார்.

மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயற்கை வளங்களும் நீர்வளங்களும் பரவலாக காணப்படுவதால், அந்தப் பகுதிகளில் அலங்கார மீன் உற்பத்தி பண்ணைகளை ஆரம்பிக்க மிகுந்த வாய்ப்பு இருப்பதாகவும், இதற்கான அரசாங்க ஆதரவுகள், பயிற்சி திட்டங்கள் போன்றவை வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அலங்கார மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி துறையை தேசிய அளவில் மேம்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைந்த செயல் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான ஆரம்பகட்ட ஆலோசனைகளும் இடம்பெற்றன. (அ)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு புதிதாக பணிப்பாளர் சபை தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 04

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் 25ஆம் திகதி சனிக்கிழமை சங்கத் தலைவர் அ. நி.மனுநீதி தலைமையில் நடைபெற்றது. இதன் போது புதிய பணிப்பாளர் சபை தெரிவு இடம்பெற்றுள்ளது.

தலைவராக தி.உதயசூரியன் (தொல்புரம்), உப தலைவராக தி.விஸ்வரூபன் (காரைநகர்), செயலாளராக கா. பார்த்திபன் (மூளாய்), பொருளாளராக அ. கிருஷ்ணமூர்த்தி (பண்ணாகம்) ஆகியோர் தெரிவானார்கள்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மா.ஞானேஸ்வரன் (வட்டுக்கோட்டை), திருமதி. செ.நாச்சியார் (சுழிபுரம்), மு. பரம்தில்லைராசா (காரைநகர்), இ. நவரத்தினராசா (வட்டுக்கோட்டை), த.சிறிதரன் (சுழிபுரம்), க.நடராசா (மாதகல்), 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்ட இரு பிரதிநிதிகளாக அ.கௌதமன் (சுழிபுரம், நி. திருவரசன் (வட்டுக்கோட்டை) ஆகியோர் தெரிவானார்கள்.

## ரூ.2.3 கோடி செலவில் வீதிக்கு காப்பெற் இடும் பணி ஆரம்பம்!

வவுனியா, நவ. 04

வவுனியா, புளியங்குளம் பரசங்குளம் புதிய வீட்டுத் திட்ட கிராம வீதிக்கான காப் பெற் இடும் பணியை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் நேற்று ஆரம் பித்து வைத்தார்.



கிராமப்புற வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 23.03 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 810 மீற்றர் தூர முள்ள வீதிக்கு காப்பெற் இடப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன், கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## தமிழர்களின் குடித்தொகை பெருக்கத்தில் பாரிய வீழ்ச்சி

### லலீசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 04

இலங்கையில் குடித்தொகை பெருக்கத்தில் தமிழர்களின் குடிப்பெருக்கம் பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளதாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர், "செந்தமிழ்ச் சொல்லருவி" சந்திரமௌலீசன் லலீசன் தெரிவித்துள்ளார்.

உலக சித்தங்கேணி ஒன்றியத்தின் அனுசரணையில், சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளை நிதியம் நடத்திய வருடாந்த வாசிப்பு மாத போட்டியின் பரிசளிப்பு விழாவானது நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்றது. அந்த விழாவில் கலந்துகொண்டு பிரதம விருந்தினர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்து தத்துவ நெறியிலே எமது முன்னோர்கள் யுகங்களை, கிருத யுகம், திரேத யுகம், துவாபர யுகம், கலியுகம் என நான்காக வகுத்தார்கள். இப்போது நடைபெறுவது கலியுகம். தலைமுறைகள் பற்றியும் சொன்னார்கள்.

1945ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறந்தவர்களை அமைதியான தலைமுறையினர் என்றார்கள். அவர்கள் பெரிதாக குடித்தொகை பெருக்கத்தை காட்டவில்லை. 1945ஆண் ஆண்டு உலகப்போர் முடிவடைந்தது. இதன்காரணமாக உலகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அப்போது, உலகத்திலே மக்கள் தொகை குறைந்து விட்டது என்றும், மக்கள் தொகையை அதிகரிக்கவேண்டும் என்றும் ஒரு கோஷம் எழுந்தது. அந்த கோஷம் யாழ்ப்பாணத்திலும் ஒலித்தது. அந்த சந்தர்ப்பத்தில் தான் மிதமிஞ்சிய அளவில் பிள்ளைகளை பெற்றார்கள்.

1945 -1950ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஒரு வீட்டில் 10, 12 பிள்ளைகளை பெற்றார்கள். அதனால் குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. இலங்கையின் குடித்தொகை கணக்கெடுப்பு தரவுகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வந்தன. ஒரு காலத்தில் 13 இலட்சம் பேர் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். தற்போது ஐந்தரை இலட்சம் பேர் மாத்திரமே யாழ்ப்பாணத்தில் உள்ளார்கள். ஏனையோர் புலம் பெயர் தேசங்களுக்கு சென்று அங்கே குடித்தொகையை பெருக்குகின்றார்கள். இங்கே, நாம் இருவர் நமக்கிருவர் என்ற காலம் போய், நாமிருவர் நமக்கேன் ஒருவர் என்று கேட்கின்ற காலம் வந்துவிட்டது.

குறிப்பாக தமிழர்களின் குடித்தொகை பெருக்கமானது குறைந்திருக்கிறது. இஸ்லாமியர்களின் குடித்தொகை பெருக்கம் 10.5 வீதத்திற்கு வளர்ச்சியடைந்துள்ளது. தமிழர்களது குடித்தொகை பெருக்கமானது 11.5 வீதத்திலேயே உள்ளது. தமிழர்களின் குடித்தொகை பெருக்கம் மெல்ல மெல்லமாக உயர்கிறது என்று சொல்கின்ற அளவிற்குகூட இல்லை- என்றார்.

(அ-05)

## முழு நிலா கலையரங்கம்

யாழ்ப்பாணம், நவ. 04

இணுவில் அறிவாலயத்தின் முழுநிலா கலையரங்கம் நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், சிறுவர்கள் பங்கு கொள்ளும் சிறப்பு பண்ணிசைப் பாடல்கள், கதாப் பிரசங்கம், அத்துடன் விருது பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, செம்முகம் ஆற்றுகைக் குழுவின் க. சீலனின் இயக்கத்தில் "வேலை" குறு நாடகமும் நடைபெறும்.

பெரிய பிரித்தானியாவின் அறிவு அறக்கட்டளையின் அனுசரணையில இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

## அதிரடிப்படையினரை தாக்கிய குற்றச்சாட்டில் ஏழு பேர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 04

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களை சுற்றிவளைக்க முற்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை தாக்கிய குற்றச்சாட்டில் 07பேர் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி - இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருங்காலி காட்டில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சுற்றி வளைத்தனர். இதன்போது பொலிஸ் விசேட அதிரடி படையினர் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோட முற்பட்ட ஏழு பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

தாக்குதலுக்குள்ளான இரண்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சாகர குலசேகர உள்ளிட்டோர் பார்வையிட்டனர். சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## அங்காடி வியாபாரிகளுக்கு 135 கடைகள் வவுனியா மாநகர சபையினால் ஒதுக்கீடு

வவுனியா, நவ. 04

வவுனியா மாநகர சபையினால் 135 அங்காடி வியாபாரிகளுக்கு கடைகள் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருவதாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.




வவுனியா மாநகர சபை அமைக்கப்பட்ட பின்னர் வவுனியா இலுப்பையடி பகுதி மற்றும் நகரை சூழ்ந்த வீதியோர அங்காடி வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டிருந்தன.

அவ்வாறு அகற்றப்பட்டவர்களுக்காக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக 60 வியாபாரிகளுக்கும், மாநகர சபையின் முன்பாக அமைந்த காணியில் 75 வியாபாரிகளுக்கும் கடைகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை இவ்வாறு வழங்கப்பட்ட கடைகளில் வீதியோர வியாபாரத்தில் முன்னர் ஈடுபடாதவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் கடைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனூடாக முறைக்கேடுகள் நடந்துள்ளதா என ஆராயப்படவேண்டும் என தெரிவித்து ஆளுநருக்கு மகஜரொன்று கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.11.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஈஸ்டர் அரசியல்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கத்தோலிக்க மக்களை ஏமாற்றி விட்டதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். வத்திக்கான் அமைச்சர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று செய்திகள் வெளியானமையைத் தொடர்ந்தே சஜித் ஈஸ்டர் தாக்குதலை கையிலெடுத்திருக்கிறார். வத்திக்கான் வெளியுறவுகளுக்கான அமைச்சர் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் தற்போது இலங்கை வருகை தந்துள்ளநிலையில் இவ்வாறான கருத்தை வெளியிட்டிருக்கிறார். அமெரிக்க உள்ளக உளவுத் துறையான எவ். பி. ஐ.யின் புலனாய்வு விசாரணைகளின்படி, மேற்குலகத்தவர்களை - கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் ஐ. எஸ். ஐ. எஸ். எனப்படும் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பால் மேற்கொள்ளப்பட்டது.

இதனை இலங்கையில் இருக்கும் கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா அல்லது இல்லையா என்பது அமெரிக்க உளவுத்துறையின் விசாரணைகளுக்கு முக்கியமானதல்ல. ஏனெனில், சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும் புலனாய்வு வலையமைப்புகளின் ஆய்வுகளின் அடிப்படையிலுமே எவ். பி. ஐ.யின் விசாரணைகள் நடைபெற்றன. மல்கம் ரஞ்சித்துக்காக அமெரிக்க உளவுத்துறை தனியான விசாரணைகளை செய்யாது.

ஆனால், இலங்கையிலுள்ள கத்தோலிக்க மதபீடம் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதை கருத்தில்கொண்டு, கத்தோலிக்க மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்கிலேயே, இதற்குப் பின்னால் உள்ளக அரசியல் சதியொன்று இருக்கிறது. என்னும் அடிப்படையிலேயே இலங்கையின் அரசியல் கட்சிகள் இதனை ஆரம்பத்திலிருந்தே அணுகியிருந்தன. இந்தப் பின்னணியில்தான் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று தேசிய மக்கள் சக்தி தேர்தல் பிரசாரங்களின்போது கூறியிருந்தது.

இந்தப் பின்புலத்தில்தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால், இது தொடர்பில் இதுவரையில் தென்னிலங்கை அரசியல்வாதிகளோ அல்லது படைத்துறையைச் சேர்ந்த எவருமே விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படவில்லை. அதாவது ஒரேயொரு தமிழரே கைது செய்யப்பட்டிருக்கிறார். அதிலும், அவர் முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்.

இந்தநிலையில்தான் தேசிய மக்கள் சக்தி கூறியது போன்று நடந்து கொள்ளவில்லை என்னும் வாதத்தை எதிரணியினர் கையிலெடுத்திருக்கின்றனர். இதன்மூலம் தாங்கள் வந்தால் இந்த விடயத்தை முன்னெடுப்போம். எங்களை ஆதரியுங்கள் என்பதுதான் இதற்குப் பின்னாலுள்ள அரசியல் வாதம். ஆனால், ஒருவேளை சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியானால் ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை கைது செய்யமுடியுமா? தேசிய மக்கள் சக்தி எவ்வாறு தேர்தல் வெற்றிக்காக சில விடயங்களை கூறிவிட்டுத் தற்போது அதனை முன்னெடுக்க முடியாமல் நெருக்கடிகளைச் சந்திக்கிறதோ - இதேபோன்றுதான், நாளை சஜித் பிரேமதாஸவின் காலமும் கழியும். ஆதாரங்களின் அடிப்படையில் விடயங்களை நோக்காமல், ஊகங்களின் அடிப்படையில் - தேர்தல் நலனின் அடிப்படையில் வாக்குறுதிகளை வழங்கும்போது இவ்வாறான பிரச்னைகளே மீண்டும் மீண்டும் ஏற்படும்.

இலங்கையின் அடிப்படையான அரசியல் சிக்கலே - தேர்தல் நலன்களுக்காகப் பேசுவதும் பின்னர், அரசியல் யதார்த்தங்களைக் கருத்தில் கொண்டு வாக்குறுதிகளை மீறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு முகம் கொடுப்பதும்தான் இலங்கையை சீரழித்தது - சீரழித்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் காலத்தில் உண்மைகளைக் கூறி அரசியலை முன்னெடுக்கக்கூடிய அரசியல் தற்துணிவுள்ள தென்னிலங்கை தலைவர்கள் எவரையும் இதுவரையில் இலங்கை காணவில்லை என்பதே வரலாறு. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் தேர்தல் வாக்குறுதிகளால் தற்போது நெருக்கடிகளைச் சந்திக்கிறார்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025



"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்."

- அலெக்சான்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)

## முதல் அரையாண்டில் அரச வருமானம் உயர்வு

கொழும்பு, நவ. 04

2025ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அன்பளிப்புகள் நீங்கலாக அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2,321.7 பில்லியன் ரூவாக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்து நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,860.6 பில்லியனாக இருந்த அரச வருமானம், 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 24.8 வீதம் அதிகரித்து 2,321.7 பில்லியன் ரூபாவை எட்டியுள்ளது. இந்த அரச வருமான உயர்வுக்கு வரி வருமானம் பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளது.

அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வரி வருமானம் 2,151.1 பில்லியன் ரூபாயாக 25.9 வீதம் அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 1,709.3 பில்லியன் ரூபாவாக காணப்பட்டுள்ளது.

இந்த வரி வருமான அதிகரிப்புக்கு மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தி வரி வருமானம், பெறுமதி சேர் வரி வருமானம், சுங்க இறக்குமதி வரிகள், வருமான வரி, விசேட வணிகப் பொருட்கள் மீதான வரிகள், சமூகப் பாதுகாப்பு வரிகள், பெற்றோலியப் பொருட்கள் மூலம் கிடைத்த வரிகள், மதுவரி வருமானம், மற்றும் செஸ் வரி போன்ற பல காரணிகள் முக்கியமாகப் பங்களித்துள்ளன. (அ)

## விமான நிலையத்தில் இளம் வர்த்தகர் கைது!

கொழும்பு, நவ. 04

2 கோடியே 10 இலட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய வர்த்தகர் ஆவார்.

சந்தேக நபரான வர்த்தகர் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தில் இருந்து நேற்று அதிகாலை 02.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர் சந்தேக நபரான வர்த்தகர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வழியாக விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்றபோது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரான வர்த்தகர் கொண்டு வந்த பயணப் பொதிகளில் மிகவும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 02 கிலோ 079 கிராம் குஷ் போதைப்பொருள் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப் பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

## ஹொரணையில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 04

ஹொரணை சிரில்டன் வத்தை பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


தனிப்பட்ட தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

12 போர் ரக துப்பாக்கியால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் தற்போது அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச் சென்ற சந்தேகநபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை ஹொரணை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 04 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - ஐப்பசி 18
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**மிதுனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தோற்றப்பொலிவு கூடும். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். தாய் வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**துலாம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும்.

**தனுசு**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**கும்பம்**
கை மாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். புது நட்பு மலரும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். பகைத்துக் கொள் ளாதீர்கள். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

# கைத்தொழில் பேட்டையை பார்வையிட்ட தென்னிலங்கை இளம் அரசியல் வாதிகள்

யாழ்ப்பாணம், நவ. 04

இலங்கை தமிழ் அரசு கட்சியின் அழைப்பின் பேரில் தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் இளம் தலைவர்கள் நேற்று முன்தினம் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை பார்வையிட்டனர்.

14 அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் அரசியல் தலைவர்கள் குழு இவ்வாறு பயணம் மேற்கொண்டிருந்தது.

வடக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் நோக்கத்துடன் வருகைதந்த குறித்த குழுவினர் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரை ரயிலில் பயணித்து காங்கேசன்துறை துறைமுகம், மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ள அபிவிருத்தி நிலைமைகள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.



இதனையடுத்து, அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு பயணம் மேற்கொண்டு அதனையும் பார்வையிட்டனர்.

வடக்கின் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக ஆராயும் முகமாக இந்தப் பயணம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குழுவினருடன் இணைந்திருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனிடம், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கைத்துப்பாக்கி கோரியமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த சுமந்திரன், "கைத்துப்பாக்கிகளை பாவிக்கத் தெரியாதவர்களுக்கு வழங்கினால் விபரீதம் ஏற்படும். இது தொடர்பில் வேறு எதுவும் கூறமுடியாது"- என்றார்.


(எ-03)

# அச்சுவேலியில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 04

யாழ்ப்பாணம், அச்சுவேலி மத்திய சனசமூக நிலையத்தில் விசேட மருத்துவ நிபுணர்களின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கம், யாழ்ப்பாணம் மருத்துவ பிரதிநிதிகள் சங்கம் மற்றும் அச்சுவேலி மத்திய சனசமூக நிலைய ஏற்பாட்டில் காலை 08.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் மருத்துவ ஆலோசகர்கள், குழந்தை மருத்துவ நிபுணர்கள், கண் அறுவை சிகிச்சை நிபுணர்கள், தோல் மருத்துவ நிபுணர்கள் பங்கேற்றனர்.



இதன்போது, இலவச மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டதுடன், பரிந்துரைக்கும் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. குறித்த மருத்துவ முகாமில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

(எ-03)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு உழவியந்திரங்கள் கைப்பற்றல்

## தப்பியோடியவர்களை கைது செய்ய தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், நவ. 04

யாழ்ப்பாணம், அரியாலை பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு உழவியந்திரங்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் அரியாலையில் நடத்திய சுற்றுக்காவல் நடவடிக்கையின் போது, பொலிஸாரின் வருகையை கண்டு சந்தேக நபர்கள் தப்பியோட முயற்சித்தபோது பொலிஸார் உழவியந்திரங்களை கைப்பற்றினர்.



தப்பியோடிய நபர்களை கைது செய்ய யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-03)

# விலகி செல்லும் இயற்கையும் வாழ்வியலும் வவுனியாவில் திறந்த கலந்துரையாடல்

வவுனியா, நவ. 04

நாம் விலகிச் செல்லும் இயற்கையும் வாழ்வியலும் எனும் தொனிப்பொருளில் சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் திறந்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ந. கபிலநாத் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஆயுர்வேத வைத்தியர் ப. சத்தியநாதன் கருத்துரைகளை வழங்கினார்.

கருத்துரைக்கு பின்னர் பொது மக்களிடமிருந்து எமது ஆரம்ப கால இயற்கையுடன் கூடிய வாழ்வியலால் ஏற்பட்ட நன்மைகள் தொடர்பாகவும் தற்போதைய வாழ்வியலால் ஏற்பட்ட நிலைகள் தொடர்பான கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி உறுப்பினர்கள், பொது அமைப்பை சேர்ந்தவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணி ஒன்றிணைவை நாம் வரவேற்கின்றோம்!

## அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி

கொழும்பு, நவ. 04

**எதிரணிகள் ஒன்றுபடவேண்டும். அது நல்லது. அதனை நாம் வரவேற்கின்றோம் என்று அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.**



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக எதிரணிகளால் எதிர்வரும் 21 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள பேரணி தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"எதிரணிகளின் போராட்டம் பற்றி அத்தரப்புகளிடம் தான் கேட்க வேண்டும். இருந்தாலும் எதிரணிகள் ஒன்றுபட வேண்டும். அவ்வாறு ஒன்றிணைவது நல்லது. ஆனால் அது சாத்தியப்படுமா என்பது சந்தேகமே.

நாம் கூட்டமொன்றை நடத்துவதாக இருந்தால் ஒரு கிழமைக்கு முன்பு இருந்துதான் தயார்ப்படுத்தல் இடம்பெறும். ஆனால் இவர்கள் ஒரு மாதத்துக்கு முன்னரே தயாராகிவிட்டனர். மக்களை திரட்டுவதற்கு இவர்களுக்கு ஒரு மாதம் செல்லும் என்பது இதன்மூலம் புலப்படுகின்றது.

நாம் எதிரணியில் இருக்கும் போது சிறப்பாக செயல்பட்டோம். இணைய வேண்டிய இடங்களில் இணைந்து பயணித்தோம். இது ஜனநாயக பண்பாகும்." எனவும் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி குறிப்பிட்டார். (அ)

# உயர்தரப் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பு, நவ. 04

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை டிசெம்பர் 10 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையை நாடு முழுவதும் 2,362 பரீட்சை நிலையங்களில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆண்டு பரீட்சை எழுத மொத்தம் 340,525 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் 246,521 பேர் பாடசாலை மாணவர்களும் 94,004 பேர் தனியார் மாணவர்களும் ஆவர்.

இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து பயிற்சி வகுப்புகளையும் நடத்துதல், சிறப்பு கருத்தரங்குகளை நடத்துதல், விரிவுரைகள் மற்றும் பட்டறைகளை நடத்துதல் மற்றும் மாதிரி வினாத்தாள்களைப் பற்றி விவாதித்தல் உள்ளிட்ட பரீட்சை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் இன்று நள்ளிரவு 12 மணி முதல் தடை செய்யப்படும்.

அனைத்து பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் தற்போது வழங்கப்பட்டுள்ளதாகவும், அது கிடைக்காதவர்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வலைத்தளத்தை அணுகலாம் என்றும் அவர் கூறினார். (அ)

# 21ஆம் திகதி போராட்டத்தினால் அச்சமடைந்துள்ளது அநுர அரசு!

## மொட்டு கட்சி கருத்து

கொழும்பு, நவ. 04

நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள போராட்டம் குறித்து அரசாங்கம் அச்சம் அடைந்துள்ளதாக பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

மொட்டு கட்சியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டார்.

"21 ஆம் திகதி நடைபெறவுள்ள போராட்டத்தால் ஆளுங் கட்சிக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. அதனால் அனைத்து விடயங்களையும் மறந்து அப்போராட்டம் பற்றி கதைக்கின்றது.

எதிரணிலுள்ள சில கட்சிகள் எதிரணியையே தாக்குகின்றன. அக்கட்சிகளுடன் எமக்கு தேர்தல் கூட்டணி கிடையாது. உரிய நேரத்தில் பதிலடி கொடுக்கப்படும்.

எமக்கு எதிராக சேறு பூசப்படுகின்றது. போலி பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மிரட்டல்மூலம் எமது அரசியல் பயணத்தை தடுக்க முடியாது." எனவும் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (அ)

# பெண் பிக்குவை அச்சுறுத்திய இருவர் கைது!

கொழும்பு, நவ. 04

பொது இடத்தில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் வத்தளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெண் பிக்கு ஒருவரை அச்சுறுத்தி, வாய்மொழியாக திட்டிய சம்பவம் தொடர்பாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள், குறித்த பெண் பிக்குவை வாய்மொழியாக திட்டுவதையும் அச்சுறுத்துவதையும் காட்டும் சம்பவத்தின் காணொளி சமூக ஊடகங்களில் பரவலாகப் பரவி வருகிறது.

வத்தளை பொலிஸ் பிரிவின் கெரவலப்பிட்டி பகுதியில் நேற்று முன் தினம் இரவு இந்த சம்பவம் நடந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் 58 மற்றும் 67 வயதுடையவர்கள், அவர்கள் வத்தளை பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இருவரும் வெலிசறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர். (அ)

# கெஹலிய குடும்பத்தின் மனுக்களை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்!

கொழும்பு, நவ. 04

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முடக்க கொழும்பு மேல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இரத்து செய்ய ரிட் உத்தரவைக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்களை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

இந்த சொத்து முடக்கம், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகத்தால் நடத்தப்பட்ட விசாரணையுடன் தொடர்புடையது.

கெஹலிய ரம்புக்வெலவின் குடும்பத்தினர் இந்த மனுக்களை சமர்ப்பித்திருந்தனர்.

மனுக்களின் ஆரம்ப உண்மைகளை மதிப்பாய்வு செய்த பின்னர், நீதியரசர் ஜனக் டி சில்வா தலைமையிலான உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு, தள்ளுபடி உத்தரவை பிறப்பித்தது. (அ)

# 6 கஞ்சா சேனைகள் அழிப்பு 6 பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, நவ. 04

ஹல்துமுல்ல அக்கரசிய வனப் பகுதிக்குள் பயிரிடப்பட்டிருந்த 6 கஞ்சா சேனைகள் சுற்றிவளைக்கப்பட்டதோடு அதனை பாதுகாத்து வந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கஞ்சா சேனைகளில் 85,000 இற்கும் அதிகமான பெரிய கஞ்சா செடிகள் இருந்துள்ளன. அவை அனைத்தும் தீயிட்டு அழிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹம்பேகமுவ, கல்தொட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்படவுள்ளனர். (அ)

# எதிர்வரும் 7ஆம் திகதியுடன் பாடசாலைகளுக்கு விடுமுறை!

கொழும்பு, நவ. 04

உயர்தர பரீட்சையை முன்னிட்டு எதிர்வரும் 7ஆம் திகதியுடன் நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது. அதற்கமைய எதிர்வரும் டிசெம்பர் 8ஆம் திகதி பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையை முன்னிட்டு விடுமுறை வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைகள் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் டிசெம்பர் 8 ஆம் திகதி பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து 2026 ஜனவரி முதலாம் திகதி புதிய கல்வியாண்டுக்காக பாடசாலைகள் ஆரம்பமாகும். தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளில் 2026 ஜனவரி முதலாம் திகதி முதலாம் தவணையின் முதற்கட்ட கல்வி செயற்பாடுகள் ஆரம்பமாகி பெப்ரவரி 13ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

பெப்ரவரி 14 முதல் மார்ச் 2ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் மார்ச் 3ஆம் திகதி முதல் ஏப்ரல் 10 வரை இடம்பெறவுள்ளது. ஏப்ரல் 11 முதல் ஏப்ரல் 19 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் தவணை ஏப்ரல் 20ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 24ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. மூன்றாம் தவணையின் முதற்கட்டம் ஜூலை 27 முதல் ஒகஸ்ட் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ஒகஸ்ட் 8 முதல் செப்ரெம்பர் 6ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் செப்ரெம்பர் 7ஆம் திகதி முதல் டிசெம்பர் 4ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வாகன இறக்குமதிக்காக 1.8 பில்லியன் டொலர் கடன் பற்று பத்திரங்களுக்கு இதுவரை அனுமதி

## பிரதி அமைச்சர் ஆர். எம். ஜயவர்தன

கொழும்பு, நவ. 04

நாட்டில் வாகன இறக்குமதிக்காக இந்த ஆண்டில் இது வரை சுமார் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் பற்று பத்திரங்களை கடிதங்களை திறக்க அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாக வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர். எம். ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அரசாங்கம் சுமார் 1.8 பில்லியன் டொலர் வரை கடன் பத்திரங்களை திறக்க அனுமதி அளித்திருந்தாலும், இதுவரை 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

நாட்டுக்கு இதுவரை சுமார் 60 வீத வாகனங்கள் மட்டுமே வந்தடைந்துள்ளன. அதன் பெறுமதி சுமார் 1.2 பில்லியன் டொலராகும். அரசாங்கம் ஆரம்பத்தில் வாகன இறக்குமதியாளர்களுக்கு 1.2 பில்லியன் டொலர் வரை கடன் கடிதங்களைத் திறக்கவே அனுமதி அளித்திருந்தது.

எனினும், கடன் கடிதங்களின் மொத்த மதிப்பு இந்த எல்லையை அடைந்தபோது, அரசாங்கம் படிப்படியாக இந்த எல்லையை 1.8 பில்லியன் டொலர் வரை அதிகரித்தது.

தற்போதைய நிலையில், கடன் கடிதங்களும் இந்தத் திருத்தப்பட்ட எல்லையை அடைந்துவிட்டன. வாகன இறக்குமதி தொடர்பான வரி திருத்தம் செய்யப்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு"

மட்டக்களப்பு, நவ. 04

தற்போதைய அரசியல் சூழல் மிகவும் வித்தியாசமானது. சமத்துவம் என்ற போர்வையில் தமிழ்த்தேசியத்தைச் சிதைப்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சிறிநாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, பாலமீன்மடுவைச் சேர்ந்த அருணன் தமிழீழனின் முள்ளியில் தொலைந்த முகவரிகள் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு கதிரவன் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"போர்வலி சுமந்த மண்ணின் மனதை கவிதைகளால் வெளிப்படுத்தியிருக்கின்றார் கவிஞர் தமிழீழன்.

எமது தமிழினம் மிக இக்கட்டான, மிக மோசமாக இன அழிப்பு செய்யப்பட்ட நிகழ்வை வரலாற்று ஆவணமாக கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அந்த வகையில் இந்தப் புத்தகத்தை ஒரு ஆவணப்பதிவாகவே நான் பார்க்கின்றேன்.

பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள் மீதான மனித உரிமை மீறல்களை மறந்து மனித உரிமை மீறல்களுக்கு எந்தவித தீர்வும் கிடைக்காத இந்தத் தருணத்தில் இவ்வாறான புத்தகம் வெளியிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் துயரம் எவ்வாறு இருந்தது என்பதை தனது கவிதையிலே வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க கடந்த கால அரசாங்கங்கள் எதுவும் முன்வரவில்லை. இந்த அரசாங்கமும் தர மறுக்கின்றது.

அபிவிருத்தி, நல்லிணக்கம் என்ற போர்வையில் எமது அனைத்து விடயங்களும் இளைஞர்கள் மத்தியில் அழிக்கப்பட்டு வருகின்றை நிலையில் இவ்வாறான புத்தகங்கள் ஊடாக எமது வடுக்களை எமது அடுத்த சந்ததியினருக்குக் கொண்டு செல்ல கவிஞர் முற்பட்டிருக்கின்றார்.

இன்றைய அரசியல் சூழல் மிகவும் வித்தியாசமானது. சமத்துவம் என்ற போர்வையில் தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன". - என்றார். (எ)




## திருகோணமலை துறைமுகத்தில் விபத்தில் சிக்கிய கனரக வாகனம்

திருகோணமலை, நவ. 04

திருகோணமலை துறைமுகத்திலிருந்து மன்னாருக்கு காற்றாலையை ஏற்றி வந்த கனரக வாகனம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை துறைமுகத்தின் வெளிப்புற வாயில் அருகே கவிழ்ந்ததில், திருகோணமலை துறைமுக வளாகத்தில் உள்ள பௌத்த வழிபாட்டு நிலையம் மற்றும் ஒரு கொள்கலன் கட்டடத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் வாகனத்தின் சாரதி உட்பட இருவர் காயமடைந்தனர். அண்மைக்காலமாக குறித்த துறை முகத்தில் இருந்து மன்னார் நோக்கி காற்றாலை எடுத்து வரப்படுகின்றன. (எ)




## பிரதமர் அம்பாறைக்கு பயணம் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு

கல்முனை, நவ. 04

கிழக்கு மாகாண கல்வித் துறை தொடர்பான அவதானிப்பு சுற்றுப்பயணத்தின் போது பிரதமர் ஹரிணி அமர சூரிய நேற்று முன்தினம் அம் பாறை மாவட்டத்துக்கு சென் றார்.

இதன்போது பிரதமருடன் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு, சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அபூபக்கர் ஆதம்பாவா, மஞ்சுளா ரத்நாயக்க உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

"புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றி கல்விச் சமூகத்துக்கு தெளிவூட்டல்" எனும் தொனிபொருளில் இரண்டு கட்டங்களாக நிகழ்வுகள் நடைபெற்றன.

நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையில் இடம் பெற்ற முதற்கட்ட நிகழ்வில், கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களில் உள்ள கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (எ)

ஐஸ் மற்றும் ஹெரோயின்

## போதைப்பொருட்கள் கடத்திய குடும்பஸ்தர் பற்றி விசாரணை

நிந்தவூர், நவ. 04

நீண்ட காலமாக போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல் மஸ்ஹர் வீதியில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை 32 வயதுடைய குறித்த குடும்பஸ்தர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், 1000 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 750 மில்லி கிராம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் கைதான குறித்த சந்தேக நபரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரில் அம்பாறை பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்லவின் உத்தரவின் பேரில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் குமாரவின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் விக்ரமரத்ன மற்றும் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸாரின் நேரடி வழிகாட்டலின் இயங்கும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான கே.எல்.எம் முஸ்தபா தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டனர். மேலதிக நடவடிக்கைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

## தபால் ஊழியர் இன்மையால் தாமதமடையும் கடிதங்கள்

மட்டக்களப்பு, நவ. 04

தபால் ஊழியர் இன்மையால் தங்களுக்கு கிடைக்கவேண்டிய கடிதங்கள் உரிய நேரத்துக்கு கிடைப்பதில்லை என பன்குடாவெளி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பன்குடாவெளி உப தபாலகத்துக்கு முன்னால் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு, பன்குடாவெளி, இலுப்படிச்சேனை, பாலர்சேனை, காயன்குடா, கொடுவாமடு, தம்பானம்வெளி, மயிலவெட்டுவான், மாவடிஓடை, பாலர்சேனை போன்ற கிராமங்களுக்கு உரிய நேரத்தில் கடிதங்கள் சென்றடைவதில்லை எனவும் இரண்டு பேர் பணியாற்றிய பன்குடாவெளி உப தபால் அலுவலகத்தில் தற்போது ஒருவர் மாத்திரமே கடமை புரிவதால் உரிய நேரத்துக்கு தபால் விநியோகம் செய்யமுடியாத நிலை காணப்படுவதால் தங்களுக்கு கிடைக்க வேண்டிய கடிதங்கள் உரிய நேரத்துக்கு கிடைப்பதில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

உப தபால் நிலையம் உள்ள பிரதேசத்தில் 8 பாடசாலைகள், நான்கு இராணுவ முகாம்கள், ஆயுள்வேத வைத்தியசாலை, சமநல சேவை நிலையங்கள், மூன்று நூலகங்கள், வனவள அதிகாரி அலுவலகம் என பல அரச தனியார் திணைக்களங்கள் இருக்கும் நிலையில் அனைத்துக்கும் ஒருவரே கடிதங்களை விநியோகம் செய்து வருவதால் உரிய நேரத்துக்கு கடிதங்கள் கிடைப்பதில்லை என்பதுடன் பல தடவைகள் காலாவதியான கடிதங்களே எமது கைகளில் கிடைக்கின் றன.

எனவே, இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி தபால் ஊழியர் ஒருவரை நியமித்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அநுர அரசாங்கம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## மத்திய மாகாணத்தில் இடியுடன் கடும் மழை

கொழும்பு, நவ. 04

சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் பிற்பகல் 02. 00 மணிக்குப் பிறகு மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பிற பகுதிகளில் பெரும்பாலும் மழையற்ற வானிலை நிலவக்கூடும் என அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் நள்ளிரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பனிமூட்டம் நிலவக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் காரணமாக ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.



## முத்துநகர் விவசாயிகளின் போராட்டம் தொடர்கிறது

திருகோணமலை, நவ. 04

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகள் தீர்வு வேண்டி தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். நேற்று 48 ஆவது நாளாக திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

352 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அழித்து தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் உற்பத்திக்காக காணிகளை வழங்கியதையடுத்து ஒன்றரை மாதங்களாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். விவசாயத்தை நம்பி வாழ்ந்த எங்களை ஏமாற்றி வீதியில் இறக்கி விட்டு அநாதரவாக்கி விட்டார்கள் எனவும் மீள எமது நிலங்களை பெற்றுத்தாரும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளஞ்செழியனுக்கு மீண்டும்...

வேலணையின் உற்றார், உறவுகளும் நலன் விரும்பிகளும் வேலணை மகா வித்தியாலய பழைய மாணவர்களும் லண்டனில் நடத்திய சேவைநலன் பாராட்டு விழா அவரை அரசியலுக்கு கொண்டு வருவதற்கான வெள்ளோட்டமாக கருதும்தொனியில் சமூக ஊடகங்களில் பதிவுகள் செய்யப்பட்டு வருவதை அடுத்தே பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் முகநூலில் தனது கருத்தை பதிவுசெய்திருக்கிறார் போன்று தெரிகிறது.

லண்டன் நிகழ்வில் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து இளஞ்செழியன் கண்கலங்கி கருத்து தெரிவித்தாரே தவிர அரசியலில் பிரவேசிக்கும் உத்தேசம் குறித்து அவர் வார்த்தை பேசவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

தனபாலசிங்கம் தனது பதிவில் கூறியிருப்பதாவது -

இளஞ்செழியனைப் பற்றி எனக்கு மிகவும் நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. ஆனால், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவியுயர்வு வழங்கப்படாமல் "அநீதி" இழைக்கப்பட்ட காரணத்தினால் அவரை வட மாகாண முதலமைச்சராகக் கொண்டுவர வேண்டும் என்ற தொனியில் வரும் கருத்துக்களுடன் எனக்கு உடன்பாடில்லை.

உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரை முதலமைச்சராக்கியதை போன்று மேல் நீதிமன்ற நீதிபதியை அதே பதவிக்கு கொண்டுவந்த பரீட்சித்துப்பார்ப்பது பொருத்தமில்லை. நீதித்துறையில் இருந்தவரை அரசியலுக்கு கொண்டுவந்து வடக்கு தமிழ் மக்களின் பிரமாண்டமான ஆதரவுடன் முதலமைச்சராக்கிய போதிலும், அந்த பரீட்சார்த்தம் இலங்கைத் தமிழர் அரசியல் களத்தில் ஒரு வீண் வேலை என்றாகிப் போனது என்பதே பரவலான அபிப்பிராயம்.

இளஞ்செழியன் உண்மையில் வட மாகாண ஆளுநர் பதவிக்கே பொருத்தமானவர் என்பது எனது அபிப்பிராயம். ஆளுநர் பதவி என்பது மாகாணத்தில் ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியாக செயற்படுவது என்பதனால் பக்கச்சார்பின்றி செயற்படுவது சாத்தியமில்லை என்று கூறலாம். ஆனால், நேர்மையானவர்கள் என்று பெயரெடுத்தவர்களை ஆளுநராக்குவதன் மூலம் ஓரளவுக்கேனும் பக்கச்சார்பின்றி செயற்படுவதை உறுதிசெய்துகொள்ள முடியும்.

ஆளுநருக்கு கூடுதல் அதிகாரங்கள் இருந்தாலும் கூட மக்களால் தெரிவு செய்யப்படக்கூடிய ஒரு வட மாகாண சபை நிர்வாகத்தில் பெருமளவுக்கு தலையீட்டைச் செய்யாமல் சுமுகமாக இயங்க விடக்கூடிய பண்பும் பக்குவமும் கொண்டவராக செயற்படக்கூடியவர் என்று இளஞ்செழியனை கருதலாம்.

இன்றைய அரசாங்கம் இளஞ்செழியனுக்கு இழைத்ததாக கூறப்படும் அநீதிக்கு பரிகாரமாக வேண்டுமானால் ஆளுநர் பதவியை அவருக்கு கொடுக்கலாம். அவரை முதலமைச்சர் வேட்பாளராகக் கொண்டுவர விரும்புவதாக நம்பப்படும்" தரப்புகள் மாகாண சபை முறையை நிராகரிப்பவர்களாக இருக்கிறார்கள் போன்று தெரிகிறது. நிராகரிப்பவர்களின் சார்பில் இவரை முதலமைச்சராக்கி மீண்டும் ஒரு தடவை வட மாகாண சபையை கேலிக் கூத்தாக்கக் கூடாது.

மாகாண சபைக்கு இருக்கின்ற எஞ்சிய அதிகாரங்களையேனும் பயன்படுத்தி அந்த முறைமையை பாதுகாப்பதற்கான ஆற்றலும் காலத்துக்கேற்ற அரசியல் விவேகமும் கொண்ட ஒருவரே வட மாகாண முதலமைச்சராக இருக்க வேண்டும் என்பதே மாகாண சபை முறைமை இதுகாலவரையில் வடக்கு அரசியல் வாதிகளினால் கையாளப்பட்ட முறையின் விளைவான பட்டறிவு.

இளஞ்செழியனை அவர் காலஞ்சென்ற குமார் பொன்னம்பலத்துடன் பணியாற்றிய காலத்தில் இருந்து ஒரு பத்திரிகையாளனாக நான் அறிவேன். அவரது தந்தையாரையும் கூட கொழும்பில் சில நிகழ்வுகளில் கண்டு பேசியிருக்கிறேன். நெருக்கமாகப் பழகக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர் நேர்மையும் எளிமையும் கொண்ட பண்பாளன் என்றும் கொடுமையைக் கண்டு கடும் சீற்றம் கொள்வதைப் போன்று அதேயளவுக்கு அவலங்களைக் கண்டு மனம் இரங்குபவர் அவர் என்பது பரவலான அபிப்பிராயம். தனது மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் அதிகாரி யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட சம்பவத்தில் அவர் நடந்துகொண்ட முறை இதற்கு உலகறிந்த சான்று.

இளஞ்செழியனை அரசியலுக்கு கொண்டுவந்து பெயரைக் கெடுத்து அவருக்கு மீண்டும் அநீதி இழைக்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. அவரின் குணவியல்புகளும் ஆற்றல்களும் அரசியலில் அல்ல வேறு தளங்களில் பயன்படுத்தப்படுவதே தமிழ்ச் சமூகத்துக்கு பயன் தருவதாக இருக்கும். அரசியலுக்கு அவரைக் கொண்டு வருவதற்கு எவராவது விரும்பினால் அவர்கள் அவருக்கு திட்டமிட்டு அநீதி இழைப்பதற்கு முயற்சிக்கிறார்கள் என்பதை எனது தாழ்மையான அபிப்பிராயம் -என்றுள்ளது. (அ)

## டில்லி...

சார்ந்த விடயங்கள் பற்றி இவ்விஜயத்தின் போது கலந்துரையாடுவார்.

இந்திய எதிர்க்கட்சித் தலைவரையும், சஜித் பிரேமதாஸ சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இந்தப் பயணத்தின்போது அதிகாரபூர்வ நிகழ்வுகளிலும் சஜித் பிரேமதாஸ கலந்து கொள்வார் என தெரியவருகின்றது. (அ)

## கைதான...

விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட மேலும் 4 இந்திய கடற்றொழிலாளர்கள் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

குறித்த நால்வர் தொடர்பில், சந்தேகம் ஏற்பட்ட நிலையில் அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாமல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். எனினும், சந்தேகம் தீர்க்கப்பட்ட நிலையில், இன்று அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இன்றைய நிலவரப்படி தமிழகத்தைச் சேர்ந்த 74 மீனவர்கள் இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த பல ஆண்டுகளாக பறிமுதல் செய்யப்பட்ட 242 மீன்பிடிப் படகுகளும் இன்னும் மீட்கப்படாமல் உள்ளன.

இதேவேளை வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 40 படகுடன் 310 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## தமிழ் மக்கள்...

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

மங்கள விளக்கை ஏற்றி நிகழ்வை ஆரம்பமான குறித்த நிகழ்வு உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி விக்னேஸ்வரனால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மணிவண்ணனால் கட்சி கொடி ஏற்றி வைக்கப்பட்டதை அடுத்து கட்சியின் தலைமைக் காரியாலயத்தின் பெயர்ப் பலகை திரைநீக்கமும் செய்துவைக்கப் பட்டது.

நிகழ்வுக்கு வருகை தந்தவர்கள் வரவேற்கப்பட்டதை தொடர்ந்து கட்சியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரனால் தலைமைச் செயலகம் உத்தியோகபூர்வமாக நாடா வெட்டி திறந்துவைக்கப் பட்டது.

இந்நிழ்வின் இறுதியில் கட்சியின் மகளிர் அணியினரது ஏற்பட்டில் பாடசாலை மாணவி ஒருவருக்கு சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழக மீனவர்கள் ...

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடி படகுகள் மற்றும் மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு இலங்கை கடல் பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஜூன் மாதத்துக்கு பின்னர் இடம்பெற்ற தொடர்ச்சியான கைதுகளில் இதுவும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இலங்கைக் கடற்பரப்பில் நுழையாதீர்கள் என எத்தனையோ தடவைகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றபோதும்,தொடர் கைதுகள் இடம்பெற்று வருகின்றன.

தமிழக மீனவர்கள் தமிழகத்தில் தொழில் செய்வதை விட இலங்கைக் கடற்பரப்பில்தான் தொழில் செய்கின்றார்களோ என எண்ணத் தோன்றுகின்றது.

தொடர் கைதினால் தமிழக மீனவர்கள் படுகின்ற துன்பங்களையும், வேதனைகளையும் நாங்கள் பார்த்து வந்தாலும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஏன் நிறுத்துகிறார்கள் இல்லை என்கின்ற கேள்வியும் எழுகின்றது.

இந்திய மீனவர்கள் பல படகுகளுடன் கைது செய்யப்படும் சூழ்நிலையில்,கடத்தல்காரர்கள் குறித்த கடல் பகுதியை பயன்படுத்துகிறார்கள் என்பதை புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. கடற்படையின் கடல் கண்காணிப்பு நடவடிக்கை திருப்தி இல்லை என்பதே உண்மை -என்றார். (அ)

## செம்மணி மனித...

ஒன்றுசேர்ந்து எதிர்க்க வேண்டும்.

இந்திய நிறுவனங்களுக்கு இடங்களை விற்பது, தேவையற்ற சட்டங்களை கொண்டுவருவதில் அரசாங்கம் விரைந்து செயற்படுகிறது.

ஏனைய விடயங்களுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் கால அவகாசம் கோருகிறது. செம்மணி மனித புதைகுழியில் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுடைய எலும்புக்கூடுகள் வெளிவந்துள்ளன. அவர்களை எந்த அடிப்படையில் பயங்கரவாதிகள் என்று கருதமுடியும். எனவே, இந்த பேரவலங்கள் தொடர்பில் உடனடியாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டுவருவதை நிறுத்த வேண்டும்-என்றார். (அ-05)

## அரசில்...

அத்துடன், எதிர்க்கட்சி ஒரு பாதாள உலகக் குழுவுக்கு உதவினால், மற்றொரு பாதாள உலகக்குழு அவர்களை எதிர்க்கும் என்பதிலேயே சிக்கல்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எது எவ்வாறாயினும் பாதாள உலகத்துடன் தொடர்பு கொண்டவுடன், அதிலிருந்து தப்பிக்க முடியாது என்றும், அதிலிருந்து வெளியேற முற்பட்டால் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தான் ஒருபோதும் பாதாள உலகத்துடன் இருந்ததில்லை என்றும், அதனாலேயே தனக்குப் பெரிய பாதுகாப்பு பிரச்னை இல்லை பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்துள்ளார். (அ)

## போதை...

தகவலுக்கமைய கஸ்துரியார் வீதியில் மோட்டார் சைக்கிளில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்தவர்களை சோதனையிட்டபோதே குறித்த நபர்கள் போதை மாத்திரைகள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் வசிக்கும் 21 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் தொடர்பாக பொலிஸாரின் கைது நடவடிக்கை தீவிரமடைந்துள்ள நிலையில் அதற்கான தட்டுப்பாடு காரணமாக சந்தேக நபர்கள் பத்து போதை மாத்திரைகள் அடங்கிய அட்டையை 3000 ரூபா வரை விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## செம்மணி...

நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான நிரஞ் சன், ஞா.ரஜித்தா உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது புதைகுழிக்குள் மழைநீர் தேங்கி நிற்பதனால் அடுத்த அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதி மீண்டும் அகழாய்வு தளத்துக்கு விஜயம் மேற்கொண்டு ஆராயப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## உயிருக்கு...

தெரிவித்துள்ளார்.

அதேவேளை , நீர்கொழும்பு பகுதியில் நபர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினருக்கு தொடர்பு இருப்பதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் பகிரப்பட்டு வருவதும் , தற்கொலை செய்து கொண்ட நபருக்கும் , பெண்ணொருவருக்கும் ,பாராளுமன்ற உறுப்பினருக்கும் தொடர்பு இருப்பதாக தனது யூரியூப் தளத்தில் கருத்துக்களை பதிவு செய்த யூரியூப்பர் ஒருவருக்கு எதிராக மன்னார் நகர சபை நகர பிதா மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வத்திக்கான்...

திருச்சபையின் தொடர்ச்சியான ஈடுபாட்டை இந்த விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத்தின் அழைப்பின் பேரில் இந்த விஜயம் இடம்பெறுகிறது.

இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 50ஆவது ஆண்டு நிறைவுடன் இந்த விஜயம் அமைந்துள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் பேராயர், ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்து, இரு தரப்பு ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட மனிதாபிமான முன்னுரிமைகள் குறித்துக் கலந்துரையாடுவார்.

அதேநேரம், ஐந்து தசாப்த கால இராஜதந்திரப் பங்களிப்பைக் கொண்டாடும் வகையிலான நினைவுப் பேருரை ஒன்றை அவர் நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட தேவாலயங்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள பல மத மற்றும் கலாசார தளங்களுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயம், பாதிக்கப்பட்டவர்களுக்கு வத்திக்கான் வழங்கும் ஒருமைப்பாட்டையும், சர்வமத நல்லிணக்கத்திற்கான அதன் ஆதரவையும் வலியுறுத்துகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கழிப்பறை வசதிற்ற 13,326 குடும்பங்கள்!

**காடுகள் மற்றும் கடற்கரைகள் போன்ற திறந்தவெளிகளை பயன்படுத்துகின்றன**

கொழும்பு, நவ. 04

**இலங்கையில் சுகாதாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளபோதிலும், 13,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னும் மலசலக்கூடங்களுக்குப் பதிலாகக் காடுகள் மற்றும் கடற்கரைகள் போன்ற திறந்தவெளிகளைப் பயன்படுத்துவதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2024 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை மற்றும் வீட்டு கணக்கெடுப்பு அடிப்படையில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, நாட்டிலுள்ள 61,11,315 குடும்ப அலகுகளில் 0.2 வீதமானவை (13,326 குடும்பங்கள்), இன்னும் கழிப்பறை வசதியின்றி வாழ்ந்து வருகின்றன.

அத்துடன் 92.2 வீதமான குடும்பங்கள் தனிப்பட்ட கழிப்பறைகளைப் பயன்படுத்துவதாகவும், 5.8 வீதமான குடும்பங்கள் ஏனைய குடும்பங்களுடன் கழிப்பறை வசதிகளைப் பகிர்ந்து கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 0.2 வீத குடும்பங்கள் பொதுக் கழிப்பறைகளை நம்பியுள்ளதுடன், 0.2 வீத குடும்பங்கள் திறந்த வெளி இடங்களைப் பயன்படுத்துகின்றன.

பொதுக் கழிப்பறைகளைப் பயன்படுத்தும் குடும்பங்களின் அதிகபட்ச எண்ணிக்கையைக் கொழும்பு மாவட்டம் பதிவு செய்துள்ளது. இதன்படி கொழும்பில் சுமார் 4,518 குடும்பங்கள் பொதுக் கழிப்பறைகளைப் பயன்படுத்துகின்றன.

அதே சமயம், அந்த மாவட்டத்தில் 207 குடும்பங்களுக்கு எந்தவிதக் கழிப்பறை வசதியும் இல்லை.

அத்துடன் கழிப்பறைகளைப் பகிர்ந்துகொள்வதில் நுவரெலியா மாவட்டம் அதிக விகிதத்தை (5.2வீதம்) கொண்டுள்ளது.

இது பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவும் சுகாதார சவால்களைப் பிரதிபலிக்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## பட்ஜெட், தேர்தல் குறித்து ஆராய நாளை கூடுகிறது தமிழரசு கட்சி

கொழும்பு, நவ. 04

இலங்கை தமிழரசுக் கட்சியின் விசேட மத்திய செயற்குழு கூட்டம் நாளை புதன்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு மத்திய குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம், மாகாண சபைத் தேர்தல், அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்குரிய நகர்வுகள் உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

அதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சிக்கும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் இடையில் விரைவில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதென தகவல் வெளியாகியுள்ளது. (அ)

## பல்கலை மாணவன் மரணம் விசாரணைக்கு அரசு உத்தரவு

கொழும்பு, நவ. 04

வவுனியா பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒருவர் பகிடிவதை காரணமாக உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக இந்த விசாரணை மேற்கொள்ளப்படும் என பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

இதற்கிடையில், இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் அற்புதராஜா தெரிவித்தார்.

உயிரிழந்தவர் அநுராதபுரம், ஜயசிறிபுர பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ். பல்கலையில் ஆயுதங்கள்; பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, நவ. 04

யாழ்.பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் யுத்தக் காலத்தில் இருந்தே அங்கு இருந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகத்தின் நூலகத்தின் கூரைக்குள் இந்த ஆயுதங்களும் வெடிமருந்துகளும் மீட்கப்பட்டமை குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர், எப்.யூ. வூட்லர் தெரிவிக்கையில்-

அந்த ஆயுதங்கள் நீண்டகாலமாக, குறிப்பாக, யுத்தக் காலத்தில் இருந்தே அங்கு இருந்திருக்கலாம் என நாம் நம்புகிறோம்.

அங்கு மேலும் ஆயுதங்கள் மறைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதால், பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து விரிவான விசாரணையை ஆரம்பித்துள்ளனர்-என்றார்.

முன்னதாக, யாழ். பல்கலைக்கழகத்தின் நூலகத்தின் கூரைக்குள் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இதையடுத்து, பல்கலைக்கழக நிர்வாகம் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளது.

இதனையடுத்து, 31 ஆம் திகதி காலை பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் குறித்த பொருட்களை மீட்டனர். (அ)

# 35 தமிழக மீனவர்களையும் உடன் விடுவிக்க நடவடிக்கை வேண்டும்!

**விஜய் கோரிக்கை**

சென்னை, நவ. 04

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள 35 மீனவர்களை உடனடியாக விடுவிக்க மத்திய அரசுக்கு உரிய அழுத்தத்தைத் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது-

தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த நம் மீனவச் சகோதரர்கள் 35 பேர், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்குச் சொந்தமான மூன்று விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப் படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வந்திருப்பது மன வேதனையளிக்கிறது.

கைது செய்யப்பட்டுள்ள நம் மீனவச் சகோதரர்கள் 35 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். அவர்களது படகுகளையும் மீட்டுத்தர வேண்டும்.

மற்ற மாநில மீனவர்கள் மீது காட்டும் அக்கறையைப் போலவே எங்கள் மீனவர்கள் மீதும் காட்டி, இதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு தாமதமின்றி உடனடியாக எடுக்கவேண்டும். மத்திய அரசுக்கு உரிய அழுத்தத்தைத் தமிழக அரசும் தாமதிக்காமல், உண்மையாகத் தர வேண்டும். இனி இதுபோல நடக்காமல் இருக்க, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை ஒன்றிய அரசும் தமிழக அரசும் காண வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக அழுத்தமாக வலியுறுத்துகிறேன்-என்றுள்ளது. (அ)

## எச்சரிக்கை மட்டத்தில் வெப்பம்!

கொழும்பு, நவ. 04

இலங்கையின் பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரிப்பதுடன், அது சுகவீனத்தையும் சுகாதார அபாயங்களையும் ஏற்படுத்தக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி மனித உடலால் உணரப்படும் வெப்பநிலையைக் குறிக்கும் வெப்பச் சுட்டெண், கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளிலும், பொலன்னறுவை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் எச்சரிக்கை மட்டத்துக்கு உயர வாய்ப்புள்ளது.

குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெப்பம் தொடர்பான நோய்களைத் தவிர்க்கப் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நீர்ச்சத்துடன் இருத்தல், மெல்லிய ஆடைகளை அணிதல் மற்றும் நண்பகல் நேரங்களில் நீண்ட நேரம் வெளியில் இருப்பதைத் தவிர்த்தல் போன்றவற்றை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை-சவூதி இடையே கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்த பேச்சு!

கொழும்பு, நவ. 04

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி ஆகியோருக்கிடையே கடற்றொழில் அமைச்சில் நட்பு மற்றும் பணிசார்ந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கடற்றொழில் மற்றும் மீன்வளத் துறைகளை நவீனமயப்படுத்தும் நோக்கில், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, முதலீட்டு விரிவாக்கம் மற்றும் அறிவு பரிமாற்றம் போன்ற துறைகளில் உறவுகளை வலுப்படுத்த சவூதி அரேபியா முனைந்துள்ளது.

சவூதி அரேபியாவின் "விசன் 2030" தொலைநோக்கு திட்டத்தின் கீழ், மீன்வளர்ப்பு, மீன்வள மேலாண்மை, கடல் ஆராய்ச்சி மற்றும் நீரியல் வள மேம்பாட்டுத் துறைகளில் பெற்றுள்ள முன்னேற்றத்தை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராட்டியதுடன், இலங்கையும் தனது வளமான கடல் பல்லுயிர் வளங்களையும், மூலோபாயமான இந்தியப் பெருங்கடல் இருப்பிடத்தையும் பயன்படுத்தி கடல்சார் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல்களில், மீன்வளர்ப்பு மேம்பாடு, நவீன தொழில்நுட்ப பரிமாற்றம், இறால் வளர்ப்பு தொழில்நுட்பங்களில் இருதரப்பு ஒத்துழைப்பு, மீன்வள உயிரியல் பாதுகாப்பு, மேலும் தீவன உற்பத்தி மற்றும் வடிவமைப்பில் தொழில்நுட்ப உதவி உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் விரிவாக ஆராயப்பட்டன. (அ)

## சைபர் குற்றங்களுக்கு எதிராக இலங்கை அடுத்த கட்ட நகர்வு

கொழும்பு, நவ. 04

சைபர் குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

இந்த மாநாடு, சைபர் குற்றங்களுக்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் பாதுகாப்பான டிஜிற்றல் சூழலை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கை சார்பான ஆவணத்தில், டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் பதில் செயலாளர் வருண சிறீ தனபால கையெழுத்திட்டுள்ளார்.

இதன்படி, இலங்கை மூன்று மாதங்களுக்குள் அமைச்சுகளுக்கு இடையேயான பொறிமுறை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இதனிடையே, இலங்கை கணினி அவசர பதிலளிப்பு பிரிவு தேசிய மையப் புள்ளியாக நியமிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org